**31.10.2025** **அசல் வழக்கு எண். 60/2021** **Starting Time : 12.25 p.m.**

**வா.சா.1 திரு. தர்மசிவம் த/பெ. ஏழுமலை**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1**). பூர்வீகம் எந்த ஊர் என்றால் தாமரைப்பாக்கம் கிராமம் ஆகும். ஏரிப்பட்டு பஞ்சாயத்திற்கு உட்பட்டது தான் தாமரைப்பாக்கம் கிராமம் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் முத்துசாமி என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் என் அப்பா மற்றும் அவருடன் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். என் தாத்தாவிற்கு பாத்யப்பட்ட பூர்வீக சொத்துகள் அனைத்தும் ஏரிப்பட்டு கிராமத்தில் தான் உள்ளது என்றால் ஏரிப்பட்டு கிராமத்தில் 2 ஏக்கரும், மீதம் உள்ள சொத்துக்கள் அத்திப்பாக்கம் மற்றும் இளங்காடு கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான்.

**2**). எனது அப்பாவிற்கும் எனது அம்மா சம்பூரணத்திற்கும் எப்போது திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1968ல் பிறந்தேன். எனது தாயார் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருந்தாரா என்றால் ஆரம்ப காலத்தில் நன்றாக இருந்தார், பிறகு உடல்நிலை சரியில்லாமல் நோய்வாய்ப்பட்டு பலவீனமாகிவிட்டார். எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் நிறைய உள்ளதாலும், எங்களிடம் வேலை பார்க்கும் நபர்களுக்கு சாப்பாடு செய்துக் கொடுக்கவும், மற்ற வேலைகளுக்காகவும் எனது அப்பாவிற்கு இன்னொரு திருமணம் செய்து வைக்கவேண்டும் என்று எனது தாத்தா முடிவு செய்தார் என்றால் சரிதான்.

**3**). எனது தாயார் நோய்வாய்ப்பட்டிருந்ததால் என்னை கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எனது தகப்பனாருக்கு இன்னொரு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எனது தாயார் கூறினார் என்றால் சரிதான். பொதுவாக இரண்டாவது திருமணத்திற்கு யாரும் பெண் கொடுக்க முன் வரமாட்டார்கள் என்றால் சரிதான். அதனால் எனது தாத்தா மிகவும் சிரமப்பட்டு

காஞ்சிபுரத்தில் எனது தகப்பனாருக்கு இரண்டாவது திருமணத்திற்காக சரஸ்வதி அம்மாள் என்பவரை பேசி திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான்.

**4**). எனது தகப்பனாருக்கு இரண்டாவது திருமணம் நடைபெற்றபோது எனக்கு 15 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் இரண்டாவது திருமணம் திருமண பத்திரிக்கை அச்சடித்து நடைபெற்றது என்றால் சரிதான். எங்கு வைத்து திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது, நான் அங்கு செல்லவில்லை. சரஸ்வதி அம்மாளை எனது தகப்பனாருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்கும் முன்பே தாவா சொத்துக்களை எனது தாத்தா சரஸ்வதியம்மாளுக்கு எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். எனது படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.2** ஆவணமான 07.02.1979ல் எனது தாத்தா 1ம் பிரதிவாதியின் தாயார் சரஸ்வதி அம்மாள் பெயரில் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான்.

**5**). 02.05.1979ம் ஆண்டு தான் எனது தகப்பனாருக்கும் சரஸ்வதி அம்மாளுக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு எனது தகப்பனார் உடன் சரஸ்வதி அம்மாள் வசித்து வந்தார் என்றால் சரிதான். 4.7.1981ல் 1ம் பிரதிவாதி எனது தகப்பனாருக்கும் சரஸ்வதி அம்மாளுக்கும் பிறந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கைக் குழந்தையாக இருக்கும்போதே சரஸ்வதி அம்மாள் நோய்வாய்ப்பட்டு காலமாகி விட்டார் என்றால் சரிதான். சரஸ்வதி அம்மாள் காலமான பின்னிட்டு எனது தாயார் உடல்நிலை சரியாகிவிட்டார் என்றால் சரிதான்.

**6**). சரஸ்வதி அம்மாள் காலமான பின்னிட்டு 1ம் பிரதிவாதியை அவரது பாட்டி அவருடன் அழைத்துச் சென்றுவிட்டார் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் என்னுடைய தம்பிகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனது பாட்டியுடன் காஞ்சிபுரத்தில் இருந்தபோதிலும் எனது தாத்தா மற்றும் எனது தகப்பனார் அவ்வப்போது சென்று செலவுக்கு பணம் கொடுத்து பார்த்துவிட்டு வருவார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு திருமணம்

எனது அப்பா மற்றும் நான் அனைவரும் சேர்ந்து செலவு செய்து திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். எங்களது குடும்பத்திற்கு விவசாய நிலத்தில் இருந்து மட்டும் தான் வருமானம் வருகிறது என்றும், வேறு வழியில் இல்லை என்றால் சரிதான். நானோ எனது தம்பிகளோ 1ம் பிரதிவாதியை எங்கள் உடன் பிறந்த சகோதரியாக நினைத்து தான் வழக்கு தாக்கல் செய்யும்வரை பார்த்து வந்து அவருக்கு தேவையான அனைத்து சீர்வரிசைகளையும் செய்து வந்தோம் என்றால் சரிதான்.

**7**). 1ம் பிரதிவாதி அவரது தாயார் சரஸ்வதி அம்மாளுக்கு எனது தாத்தா எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு தரவேண்டும் என்று கேட்டதனால் தான் எங்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சொத்துக்களை கேட்டதை நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். அதற்காக எங்கள் ஊரில் எங்கள் இருவருக்குள்ளும் பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்திற்கு நாங்கள் கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் பேசி பார்த்தோம், 1ம் பிரதிவாதி தான் கட்டுப்படவில்லை. என்ன பேசினோம் என்றால் நாங்கள் தான் 1ம் பிரதிவாதிக்கு அனைத்து சீர்வரிசைகளும் செய்துவிட்டோம், பிறகு எதற்காக சொத்து கேட்கறீர்கள் என்று பேசியதற்கு அவர் கட்டுப்படவில்லை.

**8**). 1ம் பிரதிவாதி அவரது தாயாருக்கு எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவண சொத்துக்களை மட்டும் தான் கேட்டார் என்றும், பூர்வீக சொத்துக்களை கேட்கவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தில் சொத்துக்களை பொறுத்து பாகம் கொடுக்காததால் 1ம் பிரதிவாதி என்மீதும் எனது தம்பிகள் மீதும் காவல்நிலையத்தில் பாகம் வாங்கி தர சொல்லி புகார் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். யார் யார் எல்லாம் காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானோம் என்றால் நான், எனது தகப்பனார் மற்றும் எனது தம்பிகள் சென்றோம். மேற்படி காவல்நிலையத்தில் விசாரணைக்கு பிறகு, 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் சொத்துக்களை

அவருக்கே கொடுத்து விடுகிறோம் என்றும், பூர்வீக சொத்துக்களை கொடுக்க மாட்டோம் என்றும் எழுதி கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் அவ்வாறு நாங்கள் கொடுக்கவில்லை. வேறு என்ன குறிப்பிட்டு காவல்நிலையத்தில் எழுதிக் கொடுத்தோம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை.

**9**). டிஎஸ்பி அலுவலகத்திலும் 1ம் பிரதிவாதி புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அங்கு என்ன விசாரித்தார்கள், நாங்கள் என்ன கூறினோம் என்றால் 1ம் பிரதிவாதி அவரின் தாயாரின் சொத்துக்கள் வேண்டும் என்று கேட்டார், நாங்கள் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டோம். அங்கு 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் சொத்துக்களை அவருக்கே கொடுத்து விடுகிறோம் என்றும், பூர்வீக சொத்துக்களை கொடுக்க மாட்டோம் என்றும் எழுதி கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் சரியல்ல, எனது தாத்தா மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உன் வயிற்றில் பிறக்கும் ஆண் வாரிசுகள் மட்டும் சொத்துகள் சேரவேண்டும் என்று குறிப்பிட்டு எழுதி வைத்தார், அதனால் நாங்கள் 1ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை கொடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டோம், நாங்கள் தான் 40 ஆண்டுகளாக சொத்துக்களை அனுபவித்து வருகிறோம்.

**10**). சரஸ்வதி அம்மாளை எனது தகப்பனாருக்கு திருமணம் செய்து வைத்த பிறகு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்படவில்லை, அதற்கு முன்பே எனது தாத்தா சரஸ்வதி அம்மாள் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து விட்டார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டதால் அதில் எவ்வித நிபந்தனையும் விதிக்க முடியாது என்றும், அவ்வாறு விதித்திருந்தால் அது செல்லுபடியாகாது என்று சொன்னால் சரியல்ல. சரஸ்வதி அம்மாள் எனது தகப்பனாரை திருமணம் செய்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக தான் எனது தாத்தா சரஸ்வதி அம்மாள் பெயரில் திருமணத்திற்கு முன்பே செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றும் அதில் முன் நிபந்தனை ஏதும் விதிக்க முடியாது என்றும், அவ்வாறு முன் நிபந்தனை குறிப்பிட்டிருந்தால் அது செல்லாது என்றால் சரியல்ல.

**11**). 1ம் பிரதிவாதி அவரது தாயாருக்கு எனது தாத்தா எழுதி வைத்த செட்டில்மெண்ட் சொத்துகள் 1ம் பிரதிவாதிக்கு தான் சொந்தம் என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் உரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி சொத்துக்கள் கேட்டதால் நாங்களும் சொத்து வேண்டும் என்று கேட்டு வழக்கு போட்டுள்ளோம். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்யப்பட்ட சொத்துகள் என்றும், அதனால் அது 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும், அந்த சொத்துகள் மீது நான் தடையுத்தரவு கேட்க முடியாது என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி சொத்துகளில் வந்து பிரச்சனை செய்வதால் எங்களுக்கு தடையுத்தரவு வேண்டும்.

**12**). 1ம் பிரதிவாதியின் கணவர் என்னைவிட மூத்தவரா, இளையவரா என்றால் இளையவர் தான். தாவா சொத்துக்களை கேட்டு 1ம் பிரதிவாதியும், அவரது கணவர் மட்டும் தான் கேட்டு வருகிறார்களா என்றால் ஆட்களை அழைத்து வந்து பிரச்சனை செய்கிறார்கள். எந்த ஊர் நபர்களை அழைத்து வந்தார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எத்தனை முறை 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் பிரச்சனை செய்தார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு 2,3 முறை பிரச்சனை செய்தார். 1ம் பிரதிவாதி பிரச்சனை செய்கிறார் என்று நீதிமன்றத்திலேயோ காவல்நிலையத்திலேயோ புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், நானும் எனது தம்பிகளும் சேர்ந்து தான் 1ம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்கிறோம் என்றும், அதனால் தான் 1ம் பிரதிவாதி எங்கள் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார், ஆனால் நாங்கள் பிரச்சனை செய்ய வில்லை.

**13**). 1ம் பிரதிவாதியை மிரட்டுவதற்காகவும், அவரை பணிய வைக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் மீது வேண்டுமென்றே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தாவா

சொத்துக்கள் சொந்தமானது என்பதாலும், 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்கள் சம்பந்தமாக என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றும், அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என்னிடம் பிரச்சனை செய்தார். தாவா தாக்கல் செய்வதற்காக எங்கள் ஊர் மணியக்காரரிடம் அடங்கல் பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் **வா.த.சா.ஆ.6** ஆகும்.

**14**). நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் எனது தாத்தா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், எனது தாத்தாவிற்கு பிறகு எனது அப்பா பெயருக்கு மாறிவிட்டது. தாவா சொத்திற்கு உண்மையான உரிமையாளரான 1ம் பிரதிவாதி மீது நான் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கேட்க முடியாது என்றும், எனது தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 1.11 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.